# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 1703/17 - 2011 අප්‍රේල් 27 වැනි බදාදා - 2011.04.27

*1703/17 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### சுங்க அறிவித்தல்

சுங்க சட்டத்தின் (அத்தியாயம் 235)

**III ஆம் பிரிவின் கீழான கட்டளை**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பினது 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படுவதான, சுங்கச் சட்டத்தின் (அத்தியாயம் 235) III ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், வடமேல் மாகாணத்தில் அமைந்துள்ள புத்தளம் துறைமுகமானது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஒரு துறைமுகமாக அமைதல் வேண்டும் என்பதுடன், அதன் எல்லைகள் இங்குள்ள அட்டவணை "அ" இல் குறிப்பிடப்படுவதனைப் போன்று அமைதல் வேண்டுமென, இவ்வொழுங்குவிதி மூலம் பிரகடனப்படுத்துகின்றேன். அத்துடன், அட்டவணை "ஆ" இல் குறிப்பிடப்பட்டிருக்கும் பிரதேசம், அதில் குறிப்பிடப்படும் எல்லைகளுள் சரக்குக் கப்பல்கள் தரித்தல் மற்றும் பண்டங்களை ஏற்றி இறக்கல் தொடர்பில் சட்ட ரீதியான இறங்குதுறை அமைதல் வேண்டும் என்பதும், புத்தளம் துறைமுக எல்லையினுள் அந்த இறங்கு துறைக்கான எல்லைகளும் அதன் அளவீடுகளும் அட்டவணை "இ" இல் குறிப்பிடப்படுவதனைப் போன்று அமைதல் வேண்டும் எனவும் பிரகடனப்படுத்துகின்றேன்.

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி
(நிதி, திட்டமிடல் அமைச்சர்).

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01,
2011, ஏப்பிறல் 21.

**அட்டவணை "அ" - புத்தளம் துறைமுகத்தின் துறைமுக எல்லை**

வடக்கு : வட அகலாங்கு $08^0$ 02' மற்றும் கிழக்கு நெட்டாங்கு $079^0$38' என்பனவற்றுக்கு மத்தியில் அமைந்துள்ள "அ" என்ற பெயரினை உடைய நிலையத்திலிருந்து கடற்கரையின் உயர் நீர்மட்டக் குறிவரை கிழக்கு திசையாக வரையப்பட்ட ரேகைகள் மூலம் அடையாளப்படுத்தப்பட்ட "ஆ" என்ற பெயரினை உடைய நிலையம் ;

கிழக்கு : மேல் "ஆ" எனப் பெயரிடப்பட்ட எல்லையிலிருந்து தெற்காக வட அகலாங்கு $07^0$ 58'.0, கிழக்கு அகலாங்கு $079^0$44' இல் அமைந்துள்ள "இ" என்ற பெயரினையுடைய நிலையம் வரை கடற்கரையின் உயர் நீர்மட்டக் குறி வரையான எல்லை ;

தெற்கு : வட அகலாங்கு $7^0$58'' மற்றும் கிழக்கு அகலாங்கு $79^0$38' என்பனவற்றுக்கு மத்தியில் அமைந்துள்ள "ஈ" என்ற பெயரினை உடைய நிலையத்திலிருந்தும் மேல் "இ" என்ற பெயரினை உடைய நிலையத்தில் இருந்தும் அடையாளப்படுத்தப்படும் உயர் நீர் மட்டக்குறிக்கு கிழக்காக வரையப்படவேண்டிய ரேகைகள்.

மேற்கு : மேலுள்ள "அ" உம் "ஆ" என்ற பெயரிடப்பட்ட நிலையங்களை தொடர்புபடுத்துகின்ற நேர் ரேகைகள்.

**அட்டவணை "ஆ" - புத்தளம் துறைமுகத்தில் பெயர் குறிக்கப்பட்ட சட்ட ரீதியான இறங்கு துறைகள்**

அட்டவணை "அ" இல் குறிப்பிடப்பட்டுள்ள துறைமுக இறங்குதுறை வடக்கு நோக்கி $253^0$ 9'10" ஆக இருப்பதுடன் தரையிலிருந்து இறங்கு துறை எல்லை வரையான நீளம் 511.72 மீற்றர்களாகும்.

05- 248